**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 642/2023**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுரேஷ் | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | மரியதாஸ் | தொழில் | : | எலக்ட்ரீசியன் |
| கிராமம் | : | இடைகால் | வயது | : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 04th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் இடைகாலில் குடியிருந்து வருகிறேன். நான் எலக்ட்ரீசியனாக வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 பண்டாரசாமி, அ.சா.2 கலாச்செல்வி, அ.சா.3 மகாலட்சுமி ஆகியோர்களை எனக்கு தெரியும். 03.12.2022 அன்று காலை சுமார் 08.30 முதல் 09.00 மணிக்குள் சம்பவம் நடந்தது. கலாச்செல்வி இடைகால் – ஊர்மேலழகியான் ரோட்டில் வீடு கட்ட பில்லர் தோண்டி கொண்டிருந்தார்கள். அந்த இடத்தில் தண்ணீர் தேங்கியிருந்தது. அதனை வெளியே மோட்டார் வைத்து நானும், இசக்கிராஜ் என்பவரும் எடுத்து கொண்டிருந்தோம்.

கலாச்செல்வி என்னிடம் பேசிக்கொண்டிருந்தார். எதிரி முருகையா அங்கு வந்து யாரை கேட்டு இந்த இடத்தில் வேலை செய்கிறீர்கள் என்று சத்தம் போட்டார். அப்போது கலாச்செல்வியின் அப்பா பண்டாரச்சாமி அங்கு வந்தார். முருகையாவுக்கும், பண்டாரசாமிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு

கைகலப்பானது. பூராஜ் அரிவாளை எடுத்து கொண்டு அப்போது வந்தார். பூராஜ் பண்டாரசாமியை கழுத்தை பிடித்து கீழே தள்ளினார். கலாச்செல்வியின் கழுத்தை நோக்கி வெட்ட வந்தார். அதனை கலாச்செல்வி கையால் தடுத்தார். அப்போது அந்த வெட்டு கலாச்செல்வியின் கையில் பட்டது. எதிரி முருகையா "அவளை வெட்டி கொல்லு" என்று சொன்னபோது, எதிரி பூராஜ் வெட்டினார்.

மகாலட்சுமியின் முதுகிலும், கையிலும் பூராஜ் அரிவாளை வைத்து வெட்டினார். மகாலட்சுமியின் இரண்டு தொடைகளிலும் வெட்டியதாக மகாலட்சுமி ஆட்டோவில் ஏற்றும் போது கூறினார். மகாலட்சுமியின் அப்பாவான பண்டாரசாமியின் தலையில் அரிவாளால் பூராஜ் கொத்தினார். நான் காயம்பட்ட 3 பேர்களையும் ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு தென்காசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். பண்டாரசாமிக்கு லேசான காயம் இருந்ததினால் தென்காசியிலேயே சிகிச்சை எடுத்துக்கொண்டார்.

கலாச்செல்விக்கும், மகாலட்சுமிக்கும் பெரிய காயங்கள் இருந்ததினால், அவர்களை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பின்னர், நானும், பண்டாரசாமியின் மனைவியும், அவரின் உறவினர்களும் இலத்தூர் காவல்நிலையத்திற்கு வந்து புகார் சொன்னோம். போலீசார் என்னை விசாரித்தார்கள். சம்பவயிடத்திற்கும் வந்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2025.09.08 19:22:09 +0530